# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-வேலூர் மாவட்டம்

(17.08.2017 முதல் 21.08.2017 வரை)

**கடந்த ஐந்து நாட்களில் நிலவிய வானிலை (11.08.2017 முதல் 15.08.2017)**

வேலூர் மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. 53.3 மி.மீ அளவு மழை பெய்தது. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 30.0-36.0℃ மற்றும் 22.0-26.0℃ என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 72 முதல் 90 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 2-14 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 17.08.2017 | 18.08.2017 | 19.08.2017 | 20.08.2017 | 21.08.2017 |
|---|---|---|---|---|---|
| மேகமூட்டம் | வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| மழை பொழிவு (மி.மீ) | 15 | 20 | 5 | 5 | 0 |
| காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு | 10 | 10 | 12 | 10 | 10 |
| காற்று வரும் திசை | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |
| வெப்பநிலை°C | | | | | |
| அதிகபட்ச வெப்பநிலை°C | 34 | 35 | 35 | 36 | 36 |
| குறைந்த பட்ச வெப்பநிலை°C | 24 | 25 | 25 | 26 | 26 |
| ஈரப்பதம் | 75-80 | 70-75 | 70-75 | 65-70 | 65-70 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. அடுத்த நான்கு நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கொள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.
3. உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.
4. ஆட்டு கொட்டகையின் தரையை 3 அல்லது 4 அங்குல அளவு மண்ணை மற்றுவதன் மூலம் நோய் தாக்குதலிருந்து பாதுகாக்கலாம்.
5. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
6. புழக்கடை கோழி வளர்ப்போர் கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் (இராணிகட்) தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. காய்கறிப் பயிர்களில் வாடல் நோய் மற்றும் வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த Carbendazim லிட்டருக்கு ஒரு கிராம் Carbendazim + lprodione அல்லது லிட்டருக்கு ஒரு கிராம் அல்லது Trifloxystrobin +Tebuconazole லிட்டருக்கு 0.75 கிராம் கலந்து நோய் தாக்கப்பட்ட செடியில் வேர் மற்றும் சுற்றியுள்ள ஆரோக்கியமான செடிகளின் வேர்கள் நனையும்படி காலை அல்லது மாலை வேலைகளில் தெளிக்கவும்
2. நெல்லில் பாக்டீரியா இலைக்கருகல் நோயைக் கட்டுப்படுத்த லிட்டருக்கு காப்பர் ஹைட்ராகாஸைடு 77WP 2.5 கிராம் அல்லது பசுஞ்சான கரைசல் 20 சதவிகிதம் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு கரைசல் 5 சதவிகிதம் பயன்படுத்தவும்.